RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 33 பிப்ரவரி.9 2026 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# இந்தியா அமெரிக்கா இடையே ஒப்பந்தம் வந்தாச்சு! வரியை குறைத்து கையெழுத்து

புதுடில்லி: பிப்.9-

இந்தியா அமெரிக்கா இடையேயான இடைக்கால, இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தின் செயல் திட்டம் குறித்து, இரு நாடுகளின் கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய பொருட்களுக்கு இறக்குமதி வரி 50 சதவீதத்தில் இருந்து, 18 சதவீதமாக குறைக்கப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் சமீபத்தில் அறிவித்தார். இந்நிலையில், ஒப்பந்தத்தின் நுணுக்கமான விபரங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

இந்தியா அமெரிக்கா இடையேயான இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்துக்கான செயல் திட்டத்தை உறுதிப்படுத்தும் வகையில், இரு நாடுகளும் கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளன.

இதன் வாயிலாக, இரு நாடுகளும் முழுமையான வர்த்தக ஒப்பந்தத்தை நோக்கி, மேலும் ஒரு படி முன்னேறியுள்ளன.

இந்த இடைக்கால செயல் திட்டம், சுங்க வரிகளை குறைப்பதோடு, எரிசக்தி துறையில் உறவுகளை மறுசீரமைத்து, பொருளாதார ஒத்துழைப்பை ஆழப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

உலகளாவிய வினியோக தொடர்களை மறுசீரமைக்க இரு நாடுகளும் முயற்சி மேற்கொண்டு வரும் சூழலில், இந்த வர்த்தக ஒப்பந்த செயல் திட்டம் ஏற்பட்டுள்ளது.

'பரஸ்பரம் இருதரப்புக்கும் பயனளிக்கும் வர்த்தகத்துக்கான இடைக்கால ஒப்பந்த கட்டமைப்பில், இரு நாடுகளும் உடன்பாடு ஒன்றை எட்டியிருப்பதை அறிவிப்பதில் அமெரிக்கா மற்றும் இந்தியா மகிழ்ச்சி அடைகின்றன' என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி உயரும்

இந்த செயல் திட்டம், விரிவான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை செயல் படுத்துவதை உறுதிப்படுத்துகிறது. இந்த இடைக்கால ஒப்பந்தம் வாயிலாக, இந்திய பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த அமெரிக்க இறக்குமதி வரி, 50 சதவீதத்தில் இருந்து, 18 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

எம்.எஸ்.எம்.இ., எனப்படும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், விவசாயிகள், மீனவர்கள் உள்ளிட்ட இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு 30 டிரில்லியன் டாலர், அதாவது இந்திய மதிப்பில் 2,700 லட்சம் கோடி ரூபாயில் சந்தைகள் திறக்கப்படும் என, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளும் இந்த வர்த்தக ஒப்பந்த செயல் திட்டத்தை உடனடியாக செயல்படுத்தி, பரஸ்பர நன்மை தரும் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கு ஒப்புக் கொண்டுள்ளதாகவும் கூட்டறிக்கை கூறுகிறது.

அமெரிக்க வரி குறையும்

• ஒப்பந்தத்தின் படி, அமெரிக்காவின் அனைத்து தொழில்துறை பொருட்களுக்கும், மேலும் பல்வேறு அமெரிக்க உணவு மற்றும் விவசாய பொருட்களுக்கும் இந்தியா சுங்க வரிகளை நீக்கவோ அல்லது குறைக்கவோ ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது

• கால்நடை உணவுக்கான உலர்ந்த, 'டிஸ்டிலர்ஸ் கிரெயின்ஸ்' மற்றும் சிவப்பு சோளம், கொட்டை ரகங்கள், புதிய மற்றும் பதப்படுத்தப்பட்ட பழங்கள், சோயாபீன் எண்ணெய் உள்ளிட்ட பொருட்கள் மற்றும் மது சார்ந்த பானங்கள் உள்ளிட்டவற்றுக்கும் வரி குறையும்



• இந்த ஒப்பந்த செயல் திட்டத்தின் கீழ், 'இந்தியாவில் தயாரிக்கப்படும் சில விமானங்கள் மற்றும் விமான பாகங்களுக்கும் சுங்க வரிகளை நீக்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

'அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு தேவைகளுக்கு ஏற்ப, வாகன உதிரி பாகங்களுக்கு விதிக்கப்படும் வரியில், இந்தியாவுக்கு முன்னுரிமை கொண்ட சுங்க ஒதுக்கீடு வழங்கப்படும்' என, கூட்டறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கியதற்காக, இந்தியா மீது அமெரிக்கா கடந்த ஆண்டு ஆகஸ்டில், 25 சதவீத கூடுதல் வரி விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாக அமெரிக்கா இருப்பதால், 50 சதவீத சுங்க வரி விதிப்பு, இந்திய ஏற்றுமதியாளர்களை கடுமையாக பாதித்தது.

தற்போது வரி குறைக்கப்படுவதால், துணி மற்றும் ஆடை, தோல் மற்றும் காலணி, பிளாஸ்டிக் மற்றும் ரப்பர், வேதிப்பொருட்கள், வீட்டு அலங்கார பொருட்கள், கைத்தறி மற்றும் கைவினை பொருட்கள், சில வகை இயந்திரங்கள் போன்ற தொழிலாளர் அடிப்படையிலான துறைகளின் ஏற்றுமதி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் வெற்றிகரமாக நிறைவு பெற்றால், பொது மருந்துகள், ரத்தினங்கள் மற்றும் வைரங்கள், விமான பாகங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களுக்கு அமெரிக்காவில் சுங்க வரி பூஜ்ஜியமாக குறைக்கப்படும். இதன் மூலம் இந்தியாவின் ஏற்றுமதி போட்டித்திறன் மேலும் உயர்ந்து, 'மேக் இன் இந்தியா' முயற்சிக்கு கூடுதல் ஊக்கம் கிடைக்கும்.

மேலும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் அமெரிக்காவிலிருந்து, 45 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான எரிசக்தி பொருட்கள், விமானங்கள் மற்றும் உதிரி பாகங்கள், மதிப்புமிக்க உலோகங்கள், தொழில்நுட்ப பொருட்களை வாங்க இந்தியா திட்டமிட்டுள்ளதாக கூட்டறிக்கை தெரிவிக்கிறது.

தரவு மையங்களில் பயன்படுத்தப்படும் ஜி.பி.யு., எனப்படும், 'கிராபிக்ஸ் புராசசிங் யூனிட்டு'கள் உள்ளிட்ட தொழில்நுட்ப பொருட்களின் வர்த்தகமும், அதோடு இணைந்த தொழில்நுட்ப ஒத்துழைப்பும் அதிகரிக்கும்.

மீண்டும் இதற்கிடையே, அமெரிக்க அதிபர் மாளிகை வெளியிட்ட நிர்வாக உத்தரவின்படி, 'ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெயை நேரடியாகவோ மறைமுகமாகவோ இறக்குமதி செய்வதை நிறுத்த இந்தியா உறுதி அளித்துள்ளது.

இதை கவனத்தில் கொண்டு இந்திய பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கூடுதல் 25 சதவீத சுங்க வரி, பிப்., 7 முதல் நீக்கப்படுகிறது. இது மீறப்பட்டால், மீண்டும் கூடுதல் சுங்க வரி விதிக்கப்படும்.

'மேலும், அடுத்த 10 ஆண்டுகளுக்கு பாதுகாப்பு துறையில் ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் கட்டமைப்புக்கும் இந்தியா ஒப்புக் கொண்டு உள்ளது.

'இந்த இடைக்கால ஒப்பந்தத்தின் செயல் திட்டம், சட்டப்பூர்வ ஒப்பந்தமாக மாற்றப்பட்டு, மார்ச் மாத மத்தியில் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்னேற்றம் குறித்து கருத்து தெரிவித்த மத்திய வர்த்தக அமைச்சர் பியுஷ் கோயல் கூறுகையில், ''இந்த ஒப்பந்தம் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு, குறிப்பாக எம்.எஸ்.எம்.இ., விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு, மிகப்பெரிய அமெரிக்க சந்தையை திறக்கும்,'' என்றார்.

பிரதமர் மோடி வரவேற்பு


இந்தியா அமெரிக்கா இடையிலான இடைக்கால, இருதரப்பு வர்த்தக ஒப்பந்த செயல் திட்டத்தை பிரதமர் மோடி வரவேற்றுள்ளார். எக்ஸ் தளத்தில் அவர் கூறியுள்ளதாவது: இந்தியாவும், அமெரிக்காவும் இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்துக்கான செயல்திட்டத்தை இறுதி செய்துள்ளன. இரு நாடுகளுக்கும் இடையே உறவை பலப்படுத்த அதிபர் டிரம்ப் தனிப்பட்ட முறையில் எடுத்த முயற்சிகளுக்கு நன்றி. இந்த செயல் திட்டம், இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டுறவின் நம்பிக்கையை பிரதிபலிக்கிறது. இந்தியாவின் கடின உழைப்பாளிகளான விவசாயிகள், தொழில் முனைவோர், எம்.எஸ்.எம்.இ., நிறுவனங்கள், ஸ்டார்ட்அப் புதுமையாளர்கள், மீனவர்கள் ஆகியோருக்கு வாய்ப்புகளை வழங்குவதன் வாயிலாக இந்த செயல் திட்டம், 'மேக் இன் இந்தியா' திட்டத்தை வலுப்படுத்துகிறது. இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

## செயற்கைக் கால்களைக் காட்டி அரசியல் வன்முறை பற்றி பேசிய கேரள எம்.பி. சதானந்தனுக்கு பிரதமர் மோடி பாராட்டு

புதுடெல்லி: , பிப்.9-

கேரளாவைச் சேர்ந்த நியமன எம்.பி. சதானந்தன் மாஸ்டர். கேரள பாஜக துணைத் தலைவராக இருக்கும் இவர், கேரளாவில் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். கண்ணூர் மாவட்டத்தில் ஆர்எஸ்எஸ் இயக்கத்தில் தீவிரமாக செயலாற்றிய இவரை, மார்க்சிஸ்ட் கட்சியினர் 1994ம் ஆண்டு கடுமையாக தாக்கியதில் 2 கால்களையும் இழந்து செயற்கைக் கால்களைப் பொருத்தியுள்ளார்.

இவர் கடந்த வாரம் மாநிலங்களவையில் முதல் முறையாக பேசினார். அப்போது தனது செயற்கைக் கால்களைக் கழற்றி மேசையின் மீது வைத்து ஜனநாயகம் குறித்து பேசினார். இதுகுறித்து அவருக்கு கடந்த 6ம் தேதி எழுதிய கடிதத்தில் பிரதமர் மோடி கூறியிருப்பதாவது:



உங்கள் தைரியத்தை கேரளா நன்கறியும். பிற்போக்குக் கொள்கை உடையவர்கள் நடத்திய தாக்குதலால் பாதிக்கப்பட்டோர் நாட்டில் பலர் உள்ளனர். நீங்கள் அமைதியான முறையில் உங்கள் கருத்துக்களை முன்வைத்ததைப் பாராட்டுகிறேன். நீங்கள் நாடு தான் முதலில் என்ற உறுதி மற்றும் கொள்கையை கொண்டு வந்துள்ளீர்கள். செயற்கைக் கால்களை நீங்கள் மேசையில் கழற்றி வைத்து பேசியதை பார்த்து, இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், நாட்டு மக்களும் அதிர்ச்சி அடைந்தனர்.

உங்களது பேச்சையும் சில எம்.பி.க்கள் கேலி செய்தனர். தற்போது பிற்போக்கு கொள்கைகள் வெகுவாக குறையத் தொடங்கியுள்ளது. திருவனந்தபுரத்துக்கு நான் சமீபத்தில் வந்த போது கேரள மக்கள் எனக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இது கேரளாவில் ஐக்கிய ஜனநாயக முன்னணி (யுடிஎப்) மற்றும் இடதுசாரி ஜனநாயக முன்னணியின் செயல்பாடுகளால் மக்கள் வெறுப்படைந்துள்ளதை காட்டுகிறது.

அவர்கள் வளர்ச்சியடைந்த கேரளம் என்ற நமது தொலைநோக்கு பார்வையைப் பாராட்டுகின்றனர். மத்திய பட்ஜெட், கேரளாவுக்கு குறிப்பிடத்தக்க வகையில் பயனளிக்கும் என்பதால், நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். இவ்வாறு பிரதமர் கூறியுள்ளார்.

## இந்திய ஐ.டி. சேவைகளை ஏஐ சீர்குலைக்காது தொழில் நுட்ப துறை அமைப்பான நாஸ்காம் தகவல்

புதுடெல்லி, பிப்.9-

செயற்கை நுண்ணறிவால் (ஏஐ) இந்திய தொழில்நுட்ப (ஐ.டி.) சேவை துறை பாதிக்கும் என்ற கருத்து நிலவுகிறது. இதுகுறித்து தொழில்நுட்ப துறை அமைப்பான நாஸ்காம் கூறியதாவது:

இந்திய தொழில்நுட்ப சேவைகளை ஏஐ சீர்குலைக்காது. இத்துறையின் செயல்பாட்டையும், பங்களிப்பையும் ஏஐ மறுசீரமைத்து மேம்படுத்தும். ஆந்த்ரோபிக்கின் 'கிளாட் கோவர்க்' போன்ற புதிய ஏஐ உபகரணங்கள், பல்வேறு பணிகளை தானியங்கி முறையில் செயல்பட வைக்கும். ஆனால், இந்திய ஐ.டி. சேவைகளை அது புறக்கணிக்காது. மாறாக அவற்றின் திறன்களை ஏஐ உபகரணங்கள் மேம்படுத்தும்.

சட்டம், விற்பனை, மார்க்கெட்டிங் மற்றும் தரவு பகுப்பாய்வு போன்ற துறைகளில் பணிகளைத் தானியங்கி முறையில் செயல்பட வைக்கும் ஏஐ கருவிகளால் இந்தியாவின் ஐ.டி. சேவை துறைக்கு பாதிப்பு ஏற்படும் என்ற கவலைகள் தவறானவை. சிக்கலான தொழில்நுட்ப சூழல்களுடன் செயல்படும் உலகளாவிய நிறுவனங்களுடன் இந்திய ஐ.டி. சேவை நிறுவனங்கள் இணைந்து பணியாற்றுகின்றன.

காலத்துக்கு ஏற்ப முன்னேறுவதற்கு, இந்திய ஐ.டி.நிறுவனங்கள் தங்களை மறுசீரமைக்கும் பணியை ஏற்கெனவே தொடங்கி விட்டன. அதனால் ஏஐ வரவு ஐ.டி. துறையை சீர்குலைக்கும் என்ற கவலை தேவையற்றது. இவ்வாறு நாஸ்காம் தெரிவித்துள்ளது.

## "விஜய்யின் அரசியல் வருகை திமுகவின் வாக்குகளையே பாதிக்கும்" டிடிவி.தினகரன்

கும்பகோணம், பிப்.9-

"விஜய்யின் அரசியல் வருகை திமுகவின் வாக்குகளை பாதிக்கும். அது என்டிஏ கூட்டணிக்கு மிகவும் சாதகமாக இருக்கும். அதனால் தான் அவர் வந்ததில் இருந்து நான் வரவேற்றுக் கொண்டிருக்கிறேன்" என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி. தினகரன் தெரிவித்தார்.

கும்பகோணத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் டிடிவி. தினகரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அதிமுக, பாஜக கூட்டணிக்குள் இன்னும் பல்வேறு கட்சிகள் வரவேண்டி உள்ளது. கூட்டணி உறுதி செய்யப்பட்ட பிறகு சுமுகமாக தொகுதிப் பங்கீடு நடைபெற்று, வரும் 2026 தேர்தலை ஒற்றுமையாக சந்தித்து தமிழகத்தில் என்டிஏ கூட்டணி வெற்றி பெற்று அதிமுக தலைமையில் ஜெயலலிதா ஆட்சி அமையும். வரும் தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் உறுதியாக வெற்றி பெறுவோம்.



திமுகவில் உள்ள குழப்பத்தால், அங்குள்ள கூட்டணி கட்சிகள் தொடர்ந்து நீடிக்குமா என திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கின்றது. தமிழகத்தில் ஊழல் பெருக்கெடுத்து ஓடுகிறது, போதையில் பள்ளி மாணவர்கள், பள்ளியிலேயே கஞ்சா உபயோகப்படுத்துகின்ற அளவுக்கு சட்டம் ஒழுங்கு திமுக ஆட்சியில் கெட்டு போய் விட்டது.

தமிழகம் போதைப் பொருள் பன்னாட்டு சந்தையாக மாறிவிட்டது. போலீஸாரே கஞ்சா விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டுவிட்டது. திமுக அரசு, விவசாயிகளை, அரசு ஊழியர்களை ஏமாற்றுவது போல், மக்களையும் ஏமாற்றுகிறார்கள். கடந்த தேர்தலில் அளித்த வாக்குறுதிகளில் 90% நிறைவேற்றாமல் ஏமாற்றி வருகிறார்கள்.

ஒரு குடும்பம் ஆட்சியை கையில் வைத்துக்கொண்டு தமிழகத்தை சுரண்டிப் பிழைக்கிறது. தமிழகத்தில் குழந்தைகள் முதல் முதியவர்களை வரை யாருக்கும் பாதுகாப்பு இல்லை. கொலை, கொள்ளை தான் நடக்கிறது. உறவினர்கள்,நண்பர்கள், அரசியலில் இருப்பவர்களுக்கு அழைப்பு கொடுப்பது நட்பு ரீதியாக, உறவு ரீதியாகத் தான். அவர்கள் வரவில்லை என்றால் நம் பொறுப்பு இல்லை. அவர்கள் தனித்து விடப்படப் போகிறார்கள்.

கடந்த சட்டப்பேரவை தேர்தலில் நாங்கள் தனித்து போட்டியிட்டதால், திமுகவிற்கு வெற்றிக்கான வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் இந்த முறை வாய்ப்பில்லை. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. மக்களை விலைகொடுத்து வாங்கி விடலாம் என ஊழல் பணத்தை தின்று கொழுத்தவர்கள், வரிப்பணத்தை ருசித்தவர்கள் ரூ. 3 ஆயிரம் கொடுத்து வாங்கி விடலாம் என கங்கனம் கட்டிக்கொண்டு திரிகிறார்கள்.

இன்னும் சில கட்சிகள், வேட்பாளர்களை தேடி அலைகின்றனர். மற்ற கட்சி வேட்பாளர்களை ரூ.10 கோடி தருகிறோம் என ஏமாற்றுகிறார்கள். கட்சி என்று வரும் போது உறவுக்கு வேலை இல்லை. தேசிய ஜனநாயக கூட்டணி உள்ள அனைவரும் சரியாக உள்ளார்கள். அதனால் இந்தக் கூட்டணி மாபெரும் வெற்றி பெறும்.

பழனிசாமி அறிவித்துள்ள தேர்தல் அறிவிப்புகளை 5 ஆண்டுகளில் உறுதியாக நிறைவேற்றுவார். ஆனால் திமுகவின் வாக்குறுதி டுபாக்கூர் வாக்குறுதிகள். 2006ல் விஜயகாந்த் வந்த போது எப்படி பாதிப்பு இருந்ததோ, அதே போன்ற பாதிப்பு பல கட்சிகளுக்கு இருக்கும். ஆனால் விஜய் வந்திருப்பதின் மூலம் அதை விட அதிகமான பாதிப்பு இருப்பதற்கான சூழ்நிலை தற்போது இருப்பதாக கூறப்படுகிறது.

விஜய்யின் அரசியல் வருகை திமுகவின் வாக்குகளை பாதிக்கும். அது என்டிஏ கூட்டணிக்கு மிகவும் சாதகமாக இருக்கும். எங்களுக்கு எந்த பாதிப்பும் இருக்காது. எங்கள் வெற்றிக்கு உறுதியாக உதவி செய்யும். அதனால் தான் அவர் வந்ததில் இருந்து நான் வரவேற்றுக் கொண்டிருக்கிறேன் எனத் தெரிவித்தார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது



■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் மனிதநேய மக்கள் கட்சியின் 18ஆம் ஆண்டு துவக்க விழா நகர அலுவலகம் முன்பு நடைபெற்றது. சிவகங்கை மாவட்ட மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஹிஃபீ. துல்கருணை சேட் ஒருங்கிணைப்பில், நகரச் செயலாளர் அல்ஹாப் கொடியேற்றி வைத்தார். பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் நகரத் தலைவர் அஹமது ஜலால் உள்ளிட்ட நிர்வாகிகள், கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## உதயநிதி பிறந்தநாள் கருப்பாயூரணி சீமான் நகரில் சிறப்பு பல் சிகிச்சை மருத்துவ முகாம் நடைபெற்றது

மதுரை, பிப.9-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு மதுரை மாவட்டம் கருப்பாயூரணி சீமான் நகரில் பல் சிகிச்சை சிறப்பு முகாம் நடைபெற்றது.மாமன்ற உறுப்பினர்கள் எஸ். தன்ராஜ் , எம். பி. சுரேஷ் பங்கேற்பு.மதுரை மாநகர் அண்ணா நகர் பகுதிக்கழக திமுக சிறுபான்மை யினர் அணி துணை அமைப்பாளர் மருத்துவர் முகமது யாஸின் அவர்களது ஏற்பாட்டில் பல் சிகிச்சை சிறப்பு முகாம் நடைபெற்றது...

9 வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ். தன்ராஜ் , 36 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எம். பி. சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு முகாமினை தொடங்கி வைத்தனர்...



கருப்பாயூரணி ரூட் கேனல் செண்டர் இணைந்து நடத்திய இந்த மருத்துவ சிறப்பு முகாமில்[ ] கருப்பாயூரணி முகையதீன் ஆண்டவர் ஜூம் ஆ பள்ளிவாசல் ஜமா அத் தலைவர் அகமது சேட் , ஜமா அத் பொருளாளர் மருத்துவர் சாகுல் ஹமீது , ஆட்டோ ஷாஜஹான் , மெட்ராஸ் பாண்டி , திமுக ஐடி விங் ரிஸ்வான் , மணிகண்டன், சகாபுதீன் , அயூப் கான் , கூமாபட்டி குட்டிப் பையன் முகமது யாஸிர் உள்ளிட்ட பல் மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு பல் நோய் பற்றிய சிகிச்சைகளை பெற்றுச் சென்றனர்...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை அண்ணா நகர் பகுதிக்கழக திமுக சிறுபான்மை யினர் அணி துணை அமைப்பாளர் மருத்துவர் முகமது யாஸின் தனது சொந்த ஏற்பாட்டில் சிறப்பாக செய்திருந்தார்...



## கருப்பாயூரணி முகையதீன் ஆண்டவர் பள்ளிவாசல் 13 ஆம் ஆண்டுவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது

மதுரை பிப் 09-

மதுரை மாவட்டம் கருப்பாயூரணி சீமான் நகரில் அமைந்துள்ள முகையதீன் ஆண்டவர் ஜூம் ஆ பள்ளிவாசல் உள்ளது...

பள்ளிவாசல் ஜமாத்தார்களின் ஏற்பாட்டில் 13 வது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது...

ஜமாத் தலைவர் முகமது சேட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் செயலாளர் நிஜாம் , துணைச் செயலாளர் சாகுல் ஹமீது பொருளாளர் மருத்துவர் சாகுல் ஹமீது, பகுதிக்கழக திமுக சிறுபான்மை யினர் அணி துணை அமைப்பாளர் மருத்துவர் முகமது யாஸின் உள்ளிட்ட ஜமாத்தார்கள் உள்ளிட்ட பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட மதராஸா பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் உள்ளிட்ட பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது...

] இதனிடையே நிகழ்ச்சியின் இறுதியில் அனைவருக்கும் ஜமாத்தார்களுடன் இணைந்து மருத்துவர் முகமது யாஸின் அவர்களின் ஏற்பாட்டில் அறுசுவை அசைவ உணவு , தேனீர் மற்றும் தண்ணீர் பாட்டில்கள் வழங்கப்பட்டது...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கருப்பாயூரணி முகையதீன் ஆண்டவர் ஜூம் ஆ பள்ளிவாசல் ஜமாத்தார்கள் சிறப்பாக செய்திருந்தனர்...

## குப்பைகளை எரிக்கப்படுவதால் சுகாதாரக் கேடு

பார்த்திபனூர் பிப் 09-

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஒன்றியம் பார்த்திபனூர் அருகே உள்ள நெல்மடூர் ஊராட்சிக்கு உட்பட்ட இந்திரா நகர் காலனி குடியிருப்பில் உள்ள குப்பை கிடங்கில் பார்த்திபனூர் ஊராட்சி குப்பைகளை தொடர்ந்து கொட்டியும் தீயூட்டியும் வருகின்றனர்.குப்பை கிடங்கின் அருகே வைகை ஆற்றில் இருந்து பிரிந்து வரும் நீர்ப்பாசன கால்வாயானது 25ற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு விவசாய பணிகளுக்கு நீர் செல்லும் வழித்தடமாக உள்ளது. அப்பகுதி மக்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக மாவட்ட நிர்வாகம் , சார் ஆட்சியர் , மாவட்ட காவல்துறை , பொதுப்பணித்துறை , ஊராட்சி நிர்வாகம் என அனைத்து தரப்பு அரசு அலுவலர்களிடமும் கோரிக்கை மனுவும் , தகவல் அறியும் உரிமை சட்ட மனுக்களும் அளிக்கப்பட்டு உள்ளது. இன்றைய நாள் வரை மனுவின் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சுற்றுவட்டார மக்களின் உடல்நலத்தையும் மற்றும் விவசாய பாசனத்திற்கு செல்லும் கால்வாயையும் சுகாதார சீர்கேடாக்கும் குப்பை கிடங்கில் பார்த்திபனூர் ஊராட்சி குப்பைகளை இங்கே கொட்டுவதை உடனடியாக நிறுத்த வேண்டியும் ஏற்கனவே உள்ள குப்பைகளை தீயிட்டு எரிப்பதை நிறுத்தி மக்கும் குப்பை மக்கா குப்பைகளை பிரித்து அப்புறப்படுத்துமாறும்



தொடர்ந்து பொதுமக்களை இன்னலாக்கும் நோக்கில் குப்பைகள் கொட்டப்பட்டால் நாம் தமிழர் கட்சி பெரும் மக்கள் திரள் போராட்டத்தை முன்னெடுக்கும் என்று அறிவித்துள்ளனர்

## கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளி ஆண்டு விழா

சிவகங்கை, பிப்.9-

சிவகங்கை மாவட்டம் கல்லலில் உள்ள கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளியின் 79 வது ஆண்டு விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. கவி பாரதியின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து ஆசிரியை பத்மா வரவேற்புரை வழங்கினார். மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இவ்விழாவிற்கு தலைமை தாங்கிய தலைமையாசிரியர் அழகப்பன் ஆண்டறிக்கையை வாசித்தார். உடற்கல்வி ஆசிரியர் சுப்பிரமணியன் பள்ளியின் விளையாட்டு சாதனைகளைப் பட்டியலிட்டார். சென்ற ஆண்டு பத்தாம் வகுப்பு பதினோராம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பிடித்தவர்களுக்கும், பாடவாரியாக உயர் மதிப்பெண் எடுத்தவர்களுக்கும், மாநில, மாவட்ட, முதலமைச்சர் கோப்பை, இது நம்ம ஆட்டம் மற்றும் பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் சாதித்தவர்களுக்கும் பெற்றோர்கள் முன்னிலையில் பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும், இந்த கல்வியாண்டில் வகுப்பு வரியாக முதல் மதிப்பெண் பெற்றவர்களும், முழு வருகை புரிந்தவர்களும் கௌரவிக்கப்பட்டனர். பார்வையாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான அதிர்ஷ்டக் கட்டப் போட்டியும் நடைபெற்றது. பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஜேசுதாஸ் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார்.. திருக்கோஷ்டியூர் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பாண்டிக்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. 2025 ஆம் ஆண்டில் முழு வருகை சதவீதம் புரிந்த ஆசிரியர் பிரபு நன்றியுரை ஆற்றினார். கலை ஆசிரியர் மாரிமுத்து மேடை அலங்காரம் செய்தார். ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி பெற்ற ஆசிரியர்கள் அண்ணாத்துரை மற்றும் கார்த்திகேயனுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. ஆசிரியர் சேவியர் எழில் அரசன் புகைப்படம் எடுத்தார். ஆசிரியர் கண்ணதாசன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.







## நெய்க்காரப்பட்டி ஸ்ரீ ரேணுகா தேவி குழுமத்தின் பி ஆர் ஜி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 26ஆம் ஆண்டு விழா நடைபெற்றது

திண்டுக்கல், பிப்.9-

திண்டுக்கல் மாவட்டம் பழனி நெய்க்காரப்பட்டியில் அமைந்துள்ள ஸ்ரீ ரேணுகா தேவி குழுமத்தின்

பி.ஆர்.ஜி சிபிஎஸ் பள்ளியில் 26 ஆம் ஆண்டு விழா தமிழ் தாய் வாழ்த்துக்களுடன் பள்ளியின் தாளாளர் ரஞ்சிதா ராமச்சந்திரன். ராஜ்மோகன் .சிறப்பு விருந்தினர் விஜய் டிவி ஆங்கர் ஹர்ஷத் கான். பழனி 14 ஆவது பட்டாலியன் துணை கண்காணிப்பாளர் அனாமிகா ஆகியோர்குத்து விளக்கு ஏற்றி துவங்கி வைத்தனர் அப்பொழுது மாணவ மாணவிகளிடம் பள்ளி நிறுவனர் ஆண்டு விழா என்பது வெறும் கொண்டாட்டமல்ல, அது கல்வியாண்டின் சாதனைகளை எடுத்துரைக்கும் ஒருதருணம்.

கலைநிகழ்ச்சிகளில் நவீனத்துவத்துடன் கூடிய பாரம்பரிய நடனங்கள், விவசாயம் போன்ற சமூக முக்கியத்துவம் வாய்ந்த நாடகங்கள் மாணவர்களிடையே விழிப்புணர்வை உண்டாக்கும். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றது அதில் மாணவ மாணவிகள். நாடகம், பட்டிமன்றம், வில்லுப்பாட்டு, மற்றும் தற்காப்புக் கலைகள் போன்ற நிகழ்ச்சிகள் மாணவர்கள் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். அதனைத் தொடர்ந்து. கல்வி, விளையாட்டு மற்றும் பிற செயல்பாடுகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தனர்.

■ திமுக கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும்,இளம் தலைவர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும்,கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் அவர்களின் பரிந்துரையின் பேரில்,கிருஷ்ணகிரி மேற்கு மற்றும் கிழக்கு நகர கழக செயலாளர்களாகஅஸ்லம் மற்றும் வேலுமணி ஆகியோரை தலைமைக் கழகம் அறிவித்தது.அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு இன்றுடன் வெற்றிகரமாக ஒரு ஆண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு,மாவட்ட கழக செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துகளை பெற்றனர்.





■ கன்னியாகுமரி மாவட்டம் மறவன்குடியிருப்பு பகுதியில் உள்ள புனித தஸ்நேவிஸ் மாதா ஆலயத்தில் உள்ள பங்கு பேரவையின் நிர்வாகிகள் பல கோடி ரூபாய் ஊழல் செய்தாகவும் கணக்கு வழக்குகளை ஊர் பங்கு பேரவையில் ஒப்படைக்கவில்லை எனவும் நிர்வாகிகள் தங்கள் நிர்வாகத்தை விட்டு வெளியேற வேண்டும் என கூறி பங்கு பேரவை ஊர் மக்கள் அவர்களை முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி இருதரப்பையும் சமாதானப்படுத்தி நீதிமன்றத்தை நாட வேண்டும் என கூறினார்கள் இதனால் பங்கு பேரவை கூட்டத்தில் பதற்றமான சுழ்நிலை உருவானது.இச்சம்பவத்தால் அப்பகுதியில் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்



## நலன் காக்கும் ஸ்டாலின் திட்ட சிறப்பு மருத்துவ முகாம்

தாம்பரம் பிப் 9-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, மேற்கு தாம்பரம் சேவாசதன் மேல்நிலைப் பள்ளியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து துறை மற்றும் தாம்பரம் மாநகராட்சி இணைந்து நடத்தும் நலன் காக்கும் ஸ்டாலின் திட்ட சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த முகாமினை தாம்பரம் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் தொடங்கி வைத்தார். முகாமில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு மருத்துவ பிரிவுகளை பார்வையிட்டார்.

பயனாளிகளுக்கு மேற்கொள்ளப்படும் மருத்துவ பரிசோதனைகளை பார்வையிட்டு, அவர்களுடன் கலந்துரையாடினார்.பின்னர் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து பொருட்கள் அடங்கிய பெட்டகத்தை வழங்கினார். அப்போது மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர், மாநகர நல அலுவலர் டாக்டர் .பூபேஷ், மண்டல குழு தலைவர் டி.காமராஜ் அவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ரமனி ஆதிமுலம்,பெரியநாயகம், மாநகராட்சி அலுவலர்கள், மருத்துவர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

## தமிழ்நாடு கேரளா மாநிலங்கள் மற்றும் தேனிஇடுக்கி மாவட்டங்களுக்கிடையே போதைப்பொருள் தடுப்பு மற்றும் பிற வழக்குகளின் எதிரிகள் பரிவர்த்தனை குறித்த காவல் துறை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

தேனி பிப். 09-

காவல் துறை துணைத்தலைவர் டாக்டர்.றி.சாமிநாதன், திண்டுக்கல் சரகம் தலைமையில், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டா.ஙி.சினேஹப்ரியா, கேரளா மாநிலம், இடுக்கி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .ரி.வி.சாபுமேத்யூ, கேரளா மாநிலம், இடுக்கி மாவட்ட தனிப்பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் .ஜி.கி.யூனஸ், கேரளா மாநிலம், இடுக்கி மாவட்டம் பீர்மேடு உட்கோட்ட காவல் துணைக்கண்காணிப்பாளர் விஷால் ஜான்சன், தேனி மாவட்டம் உத்தமபாளையம் உட்கோட்டம், காவல் துணைக்கண்காணிப்பாளர் ஸி.பொன்னரசு, தேனி மாவட்ட தனிப்பிரிவு காவல் ஆய்வாளர் சி.சரவணன் மற்றும் கேரளா - தமிழ்நாட்டைச் சேர்ந்த காவல் துறை அலுவலர்கள் ஆகியோர்கள் பெரியார் புலிகள் பாதுகாப்பு சரணாலய துணை இயக்குநர் அலுவலகத்திலுள்ள அரங்க கூட்டத்தில் நடைபெற்ற மாநிலங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் வருகின்ற சட்டசபை தேர்தல்2026 சம்மந்தமான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும், போதைப்பொருள் தடுப்பு மற்றும் பிற வழக்குகளில் எதிரிகள் பரிமாற்றம் குறித்தும் கலந்தாய்வு செய்யப்பட்டது.



பின்னர் திண்டுக்கல் சரக காவல் துறை துணைத்தலைவர் அவர்கள் தேனி மாவட்டத்தின் மாநில எல்லையில் அமைந்துள்ள முந்தல் மதுவிலக்கு சோதனை சாவடி, போடிமெட்டு சோதனைச்சாவடி, கம்பம்மெட்டு சோதனைச்சாவடி மற்றும் குமுளி சோதனைச்சாவடி ஆகிய இடங்களை பார்வையிட்டும் பாதுகாப்பு அலுவல் குறித்தும் அறிவுரைகள் வழங்கினார்.

# புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு முடிச்சூரில் மாபெரும் இலவச மருத்துவ முகாம்

தாம்பரம் பிப் 09-

செங்கல்பட்டு மாவட்டம் புனித தோமையார் மலை ஒன்றிய ஊராட்சிக்குட்பட்ட முடிச்சூர் ஊராட்சி சார்பில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு கழக மாநில மருத்துவ அணி துணை செயலாளர் டாக்டர் பாலாஜி ஸ்ரீகாந்த அவர்களின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மதியம் ஒரு மணி வரை இந்திரா நகர் 7வது தெருவில் செங்கல்பட்டு சிவா மருத்துவமனை, தாம்பரம் வாசன் கண் மருத்துவமனை மற்றும் தாம்பரம் பாலாஜி பல் மருத்துவமனை ஆகியோர்களால் இந்த இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் டி.கே.எம் சின்னையா,





ஒன்றிய கழகச் செயலாளர் எம்.பி.மனோகரன், முன்னாள் ஒன்றியம் செயலாளர் என் சி கிருஷ்ணன், ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர் இந்த மருத்துவ முகாமில் சர்க்கரை வியாதி சிறப்பு மருத்துவம், கண் மருத்துவம், பொது மருத்துவம், ணிசிநி ஙிறி சிஙிநி, குழந்தைகள் நலம், பல் மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ சார்ந்த இலவச முகாம் நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு நிர்வாகிகள் மற்றும் முடிச்சூர் ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# "மக்களுக்காகஞ் மக்களிடமிருந்து: கிருஷ்ணகிரியில் பாஜக தேர்தல் அறிக்கை 2026 மக்கள் கருத்து சேகரிப்பு இயக்கம் தொடக்கம்"

கிருஷ்ணகிரி, பிப் 09-

மக்களுக்காகஞ் மக்களிடமிருந்துஞ் தேர்தல் அறிக்கை 2026

2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கையை பொதுமக்களிடமிருந்து நேரடியாக கருத்து கேட்டு உருவாக்கும் மக்கள் தொடர்பு இயக்கம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி கிருஷ்ணகிரி நகரத்தில் காலை 11.30 மணிக்கு, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தலைவர் திரு. கூஷி.ஷி.கவியரசு, விஙிகி அவர்கள் தலைமையில் துவங்கப்பட்டது.

இந்த மக்கள் கருத்து சேகரிப்பு இயக்கத்தின் மாவட்ட பொறுப்பாளராக மாநில செயற்குழு உறுப்பினர் திரு. ரிஷிநி. சிவப்பிரகாசம் அவர்கள் செயல்பட்டார்.

சிறப்பு பிரச்சார வாகனத்தை தேசிய பொது குழு உறுப்பினர் மற்றும் முன்னாள் எம்பி திரு.



சி. நரசிம்மன் அவர்கள் கோடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொது செயலாளர் திரு. வி.ஸி. ராஜேந்திரன், மாநில செயற்குழு உறுப்பினர் திருமதி. வசந்தகோகிலா, மாவட்ட சமூக ஊடகப் பிரிவு திரு. நி. மணிகண்டன், மாவட்டத் துணைத் தலைவர் திரு. மன்னன் சிவா, மாவட்ட செயலாளர்கள் திரு. ஷி. கார்த்திகேயன், திரு. கோவிந்த பிரகாஷ், திரு. ராமன், மாவட்ட பொருளாளர் திரு. ராணா, மாநில பொதுக்குழு உறுப்பினர் திரு. வேணு செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், இந்நிகழ்ச்சிக்கு நகரத் தலைவி திருமதி. விமலா அவர்கள் வரவேற்புரை வழங்கினார். ராணுவ பிரிவு மாநில செயலாளர் திரு. கோவிந்தராஜன், மாவட்ட மகளிர் அணி தலைவி திருமதி. சிலம்பு ஒலி, தொழில் பிரிவு மாவட்ட தலைவர் திரு. லோகேஷ் குமார், பொருளாதார பிரிவு இணை அமைப்பாளர் திரு. குமரேசன் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.




# அகில பாரத ஐயப்ப சேவா சங்கம் மதுரை மாவட்ட செயற்குழு கூட்டம்

மதுரை, பிப்.9-

அகில பாரத ஐயப்ப சேவா சங்கம் மதுரை மாவட்ட செயற்குழு கூட்டம் மாநில தலைவர் விஸ்வநாதன் ஆலோசனையின் பேரில், புரவலர் குருசாமி முன்னிலையில் மதுரையில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் ஐ. குருசாமி தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் பாலமுருகன் வரவேற்புரை ஆற்றினார்.

கூட்டத்தில், சங்கத் தொண்டர்கள் எதிர்காலத்தில் சபரிமலையில் சேவை செய்ய மத்திய, மாநில அமைப்புகள் தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கடந்த மண்டல, மகர விளக்கு விழா காலங்களில் திருப்பரங்குன்றம், கள்ளந்திரி பகுதிகளில் அன்னதானம் வழங்கிய நிர்வாகிகள், தொண்டர்கள், நன்கொடையாளர்களுக்கு பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டது.மேலும் "ஓம் ஸ்ரீ ஐயப்பன்" மாத இதழுக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், கள்ளந்திரி சாஸ்தா முதியோர் இல்லம், கோசா மட பராமரிப்பு மற்றும் மாவட்ட வளர்ச்சிக்காக உறுப்பினர்கள் நன்கொடை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர். முடிவில் சின்னச்சாமி நன்றி கூறினார்.

# ஆயக்குடியில் விவேகானந்தா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 40வது ஆண்டு பொன் விழா நடைபெற்றது

திண்டுக்கல், பிப்.9-

திண்டுக்கல் மாவட்டம் பழனி ஆயக்குடியில் அமைந்துள்ள விவேகானந்தா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 40வது ஆண்டு பொன்விழா பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவிகள் மதுரை மாவட்ட சார் ஆட்சியர் . வேளாண்மை இணை இயக்குனர் மற்றும் கல்லூரி முதல்வர் ஆகியோர் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தனர் பள்ளி ஆண்டு விழா, பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளுடன் சிறப்பாக நடைபெற்றது. விழா விறுவிறுப்பாகவும், வண்ணமயமான கலை நிகழ்ச்சிகளுடனும், மாணவர்களின்





தனித்திறன்களை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்தது. பரிசளிப்பு விழாவில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. அப்பள்ளியில் பயின்ற மாணவர்கள்பள்ளி கல்வியில் மட்டுமல்லாது, கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகளிலும் சிறந்து விளங்கியுள்ளது. மாவட்ட மற்றும் மாநில அளவில் மாணவர்கள் வென்று சாதனை படைத்துள்ளனர். பின்பு செய்தியாளர் சந்திப்பில் பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவி மதுரை மாவட்ட சார்ஆட்சியர் இப்பள்ளியில் படித்தது தற்பொழுது நான் அரசு வேலையில் பணியாற்றி வருகிறேன் அதுவே என்னுடைய மிகப்பெரிய வெற்றி ஆகும் மற்றும் என்னை அழைத்து கௌரவித்தது மிகப்பெரிய வரலாற்றுச் சுவாடாக கருதுகிறேன் இப்பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் அரசுத் துறையிலும் தனியார் துறையிலும் பணியாற்றி வருகிறார்கள் அதுவே இப்பள்ளிக்கு பெருமையாகும். அதனைத் தொடர்ந்து கல்லூரியின் முதல்வர் செய்தியாளர்களிடம் இப்பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் அரசு துறையில் பணியாற்றி வரும் அவர்களை அழைத்து அவர்களுக்கு கௌரவித்து மாணவர்கள் மத்தியில் அவர்களை அறிமுகப்படுத்தி இவர்களைப் போன்று நாமும் மிகப்பெரிய இலக்குகளை அடைய ஒழுக்கம் நற்பண்புகள் படிப்பு போன்றவைகளை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும் எனக் கூறினார்

# "குரூப் 2 தேர்வு ஏன் ரத்து செய்யப்பட்டது என தெரியவில்லை" அமைச்சர் ஐ.பெரியசாமி

திண்டுக்கல், பிப்.9-

"குரூப் 2 தேர்வு எதற்காக ரத்து செய்யப்பட்டது என எனக்கு தெரியவில்லை" என அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட உலகம்பட்டியில் புதிய நியாயவிலைக்கடை கட்டிடத்தை திறந்துவைத்த அமைச்சர் ஐ.பெரியசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது: "டிஎன்பிஎஸ்சி குரூப் 2 தேர்வு எதற்காக ரத்து செய்யப்பட்டது என எனக்கு தெரியவில்லை. அதற்கென தனியாக



அமைப்பு உள்ளது. தேர்வாணையத்திற்கு தலைவர் உள்ளார். தன்னாட்சி நிறுவனமாக செயல்படுகிறது.

மாணிக்கம் தாகூரின் தனிப்பட்ட கருத்துக்கு பதில் சொல்வது நியாயமாகப் படவில்லை. நாங்கள் கட்டுப்பாடுள்ள இயக்கத்தில் உள்ளோம். கருத்து என்பது கட்சிக்கு உடன்பாடு உள்ளதாக இருக்கவேண்டும். மாணிக்கம் தாகூர் எம்பி தினமும் அறிக்கை விடுவதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை.

அந்த இயக்கத்தின் தலைவர்கள் சொன்னால் அதற்கு பதில் சொல்லலாம். தற்போது திமுக கூட்டணி பலமாக உள்ளது. இடதுசாரி இயக்கங்கள், காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி என எல்லா கட்சியும் நம்முடன் உள்ளது. யார் கூட்டணிக்கு வந்தாலும் அவர்களை முதலமைச்சர் ஸ்டாலின் மறுக்கப் போவதில்லை. வந்தால் நிச்சயமாக முதலமைச்சர் முடிவு செய்து சேர்ப்பார்" என்றார்.

# நெல்லையில் வீட்டில் பிரசவம் பார்த்ததால் குழந்தை இறந்தது தந்தையை கைது செய்த போலீஸார்

நெல்லை, பிப்.9-

மேலப்பாளையத்தில் வீட்டில் பிரசவம் பார்த்ததில் குழந்தை இறந்து பிறந்த விவகாரத்தில் நசிம் உசேன் (35) என்பவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

மேலப்பாளையம் தெற்கு தைக்கா தெருவை சேர்ந்த நியாஸ் அலி மகன் நசிம் உசேன். இவரது மனைவி நிறைமாத கர்ப்பிணியாக இருந்துள்ளார். அவருக்கு பிரசவ தேதி நெருங்கிய நிலையில், அவரை மேலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து வருமாறு நிலைய மருத்துவர் அறிவுறுத்தியுள்ளார்.

ஆனால், ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மனைவியை அழைத்துச் செல்லாமல், நேற்று முன்தினம் இரவில் வீட்டில் வைத்து நசிம் உசேன் பிரசவம் பார்த்துள்ளார். இதில், அவரது மனைவிக்கு ஆண் குழந்தை இறந்த நிலையில் பிறந்தது.

"சிசுவின் உடலை காட்டு ஜும்மா பள்ளிவாசலில் அடக்கம் செய்துள்ளனர்" என, மேலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் சுமதி, மேலப்பாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீஸார் வழக்கு பதிந்து, நசிம் உசேனை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# துபாய் நகைக் கடை பகுதியில் உலகின் முதல் தங்கச் சாலை

துபாய், பிப்.9-

தங்கம் விலை பவுன் ரூ.1.24 லட்சத்தை தாண்டி விற்பனையாகி கொண்டிருக்கிறது. இந்நிலையில் துபாயில் கோல்ட் மாவட்டத்தில் நகைக் கடைகள் இருக்கும் பகுதியில் தங்க சாலை அமைக்கும் திட்டம் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாய் கோல்ட் மாவட்டம் கோல்ட் சவுக் பகுதியில் 1,000க்கும் மேற்பட்ட தங்க நகைக் கடைகள் அமைந்துள்ளன. இதன் அருகில் உள்ள தியரா பகுதியிலும் தங்கம் தொடர்பான வர்த்தகம்தான் நடைபெறுகிறது. துபாய் வர்த்தகம் மற்றும் பாரம்பரியத்தில் தங்கம் முக்கிய பங்கு வகிக்கிறது.

கடந்த 202425ம் நிதியாண்டில் ஐக்கிய அரபு அமீரகம் 53.41 பில்லியன்




அமெரிக்க டாலர் (ரூ.4 லட்சத்து 84 ஆயிரம் கோடி) மதிப்பிலான தங்க நகைகளை ஏற்றுமதி செய்துள்ளது. இது தவிர முதலீடு சேவைகள் நிறுவனங்கள் மற்றும் ஆடம்பர பொருட்கள் விற்பனையும் இங்கு நடைபெறுகிறது.

இந்தியா, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, ஹாங்காங், துருக்கி உட்பட உலகின் பல நாடுகளில் இருந்து தங்கநகை வியாபாரிகளும், சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்லும் இப்பகுதியில் தங்கத்தில் சாலை அமைக்கும் திட்டத்தை துபாய் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். சர்வதேச பார்வையாளர்கள், முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக இத்திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சாலை அமைப்பதற்கான கட்டுமான விவரங்கள், காலக்கெடு ஆகியவை படிப்படியாக அறிவிக்கப்படவுள்ளன. இங்கு தங்கச் சாலை அமைக்கப்பட்டால், இது உலகின் முதல் தங்கச் சாலையாக இருக்கும்.

# இந்திய ஐ.டி. சேவைகளை ஏஐ சீர்குலைக்காதுதொழில்நுட்ப துறை அமைப்பான நாஸ்காம் தகவல்

புதுடெல்லி, பிப்.9-

செயற்கை நுண்ணறிவால் (ஏஐ) இந்திய தொழில்நுட்ப (ஐ.டி.) சேவை துறை பாதிக்கும் என்ற கருத்து நிலவுகிறது. இதுகுறித்து தொழில்நுட்ப துறை அமைப்பான நாஸ்காம் கூறியதாவது:இந்திய தொழில்நுட்ப சேவைகளை ஏஐ சீர்குலைக்காது. இத்துறையின் செயல்பாட்டையும், பங்களிப்பையும் ஏஐ மறுசீரமைத்து மேம்படுத்தும். ஆந்த்ரோபிக்கின் 'கிளாட் கோவர்க்' போன்ற புதிய ஏஐ உபகரணங்கள், பல்வேறு பணிகளை தானியங்கி முறையில் செயல்பட வைக்கும். ஆனால், இந்திய ஐ.டி. சேவைகளை அது புறக்கணிக்காது. மாறாக அவற்றின் திறன்களை ஏஐ உபகரணங்கள் மேம்படுத்தும்.சட்டம், விற்பனை, மார்க்கெட்டிங் மற்றும் தரவு பகுப்பாய்வு போன்ற துறைகளில் பணிகளைத் தானியங்கி முறையில் செயல்பட வைக்கும் ஏஐ கருவிகளால் இந்தியாவின் ஐ.டி. சேவை துறைக்கு பாதிப்பு ஏற்படும் என்ற கவலைகள் தவறானவை. சிக்கலான தொழில்நுட்ப சூழல்களுடன் செயல்படும் உலகளாவிய நிறுவனங்களுடன் இந்திய ஐ.டி. சேவை நிறுவனங்கள் இணைந்து பணியாற்றுகின்றன.காலத்துக்கு ஏற்ப முன்னேறுவதற்கு, இந்திய ஐ.டி.நிறுவனங்கள் தங்களை மறுசீரமைக்கும் பணியை ஏற்கெனவே தொடங்கிவிட்டன. அதனால் ஏஐ வரவு ஐ.டி. துறையை சீர்குலைக்கும் என்ற கவலை தேவையற்றது. இவ்வாறு நாஸ்காம் தெரிவித்துள்ளது

# ஆட்டோ தொழிலாளர்கள் பிப்ரவரி 12ல் மறியல்; 24ல் மாபெரும் ஆர்ப்பாட்டம்: சிஐடியு மாவட்ட குழு அறிவிப்பு

சிவகங்கை பிப் 09-

சிவகங்கை மாவட்ட ஆட்டோ சிஐடியு (CITU) மாவட்ட குழு கூட்டம் கடந்த பிப்ரவரி 7 நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மத்திய, மாநில அரசுகளின் தொழிலாளர் விரோதப் போக்குகளைக் கண்டித்தும், ஆட்டோ தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் இரண்டு கட்ட போராட்டங்களை முன்னெடுப்பது என ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது.

பிப்ரவரி 12: பொது வேலைநிறுத்தம் மற்றும் மறியல்

மத்திய அரசின் தொழிலாளர் சட்ட திருத்தங்கள், அபரிமிதமான அபராத முறைகள் (ஆன்லைன் சலான்) மற்றும் எஃப்சி (FC) கட்டண உயர்வை கண்டித்து, பிப்ரவரி 12 அன்று நடைபெறும் பொது




வேலைநிறுத்தம் மற்றும் மறியல் போராட்டத்தில் ஆட்டோ தொழிலாளர்கள் பெருமளவில் பங்கேற்க உள்ளனர்.

* பங்கேற்பு முறை: 10 தொழிலாளர்களுக்கு கீழ் உள்ள ஸ்டாண்டுகளில் இருந்து ஒரு நபரும், 10 நபர்களுக்கு மேல் உள்ள ஸ்டாண்டுகளில் இருந்து இரண்டு பேரும் மறியலில் ஈடுபட்டு கைதாக வேண்டும்.

* வேலைநிறுத்தம்: அன்றைய தினம் காலை 9 மணி வரை பள்ளி மாணவர்களை ஏற்றிச் சென்ற பிறகு, அனைத்து தொழிலாளர்களும் வாகனங்களை நிறுத்தி முழுமையாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட வேண்டும்.

பிப்ரவரி 24: அரண்மனை வாசல் முன் ஆர்ப்பாட்டம்

ஆட்டோ தொழிலாளர் சம்மேளன மாநில குழு முடிவின்படி, பிப்ரவரி 24 (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி அளவில் சிவகங்கை அரண்மனை வாயில் முன்பு மாநிலம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

முக்கிய கோரிக்கைகள்:

* தமிழக அரசு மீட்டர் கட்டணத்தை உயர்த்தி வழங்க வேண்டும்.

* ஓலா, உபேர் மற்றும் பைக் டாக்ஸி போன்ற பன்னாட்டு நிறுவனங்களை அனுமதித்து ஆட்டோ தொழிலை நசுக்கக்கூடாது.

* ஆன்லைன் அபராத முறையை (Online Challan) ரத்து செய்ய வேண்டும்.

* சிவகங்கை மாவட்டத்தில் வசூலிக்கப்படும் புகை சான்றுக்கான கூடுதல் கட்டண உயர்வை திரும்பப் பெற வேண்டும்.

நிர்வாக முடிவு

இந்த போராட்டங்களுக்கான செலவினங்களுக்காக ஒவ்வொரு கிளைச் சங்கமும் தலா 200 ரூபாய் வழங்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. இந்த இரு போராட்டங்களிலும் அனைத்து ஸ்டாண்ட் தொழிலாளர்களும் தவறாது கலந்து கொண்டு சங்கத்தின் பலத்தை நிரூபிக்க வேண்டும் என்றும், கோரிக்கைகளை வென்றெடுக்க தொடர்ந்து போராடுவது அவசியம் என்றும் மாவட்ட பொதுச் செயலாளர் அ. விஜயகுமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

# முலப்பாளையத்தில் நெஞ்சை உலுக்கும் சம்பவம்

## மர்ம நபர்கள் செம்மறி ஆடுகளுக்கு தண்ணீரில் விஷம். 3 லட்சம் மதிப்புள்ள 17ஆடுகள் பலி விவசாயி குடும்பம் கதறல்.

திருப்பூர், பிப்.9-

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அருகே உள்ள எரசனம்பாளையம் ஊராட்சி, முலப்பாளையம் பகுதியில் நடந்த சம்பவம் பொதுமக்களிடையே அதிர்ச்சியையும், விவசாயிகளிடையே அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.



அப்பகுதியில் வசித்து வருபவர் ஸ்ரீரங்கசாமி, வயது 65. இவரது மனைவி பழனியாத்தாள், வயது 60. இருவரும் தங்களது சொந்த தோட்டத்தில் ஆடு, மாடு வளர்த்து, அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்தி வந்துள்ளனர்.

இந்த நிலையில், வழக்கம்போல் காலை 7 மணி அளவில், வீட்டின் அருகே உள்ள பட்டியில் இருந்து ஆடுகளை மேய்ச்சலுக்காக, தங்களுக்குச் சொந்தமான அரவான் காட்டு தோட்டத்தில் விட்டுள்ளார். ஆடுகள் தண்ணீர் குடிக்க வசதியாக, தண்ணீரை தொட்டியில் ஊற்றி வைத்துவிட்டு, ஸ்ரீரங்கசாமி வீடு திரும்பியுள்ளார்.

அதன் பின்னர், மேய்ச்சலுக்கு விடப்பட்ட ஆடுகள் ஒவ்வொன்றாக தண்ணீர் குடித்த நிலையில், திடீரென சுருண்டு விழுந்துள்ளன. சில ஆடுகள் வாயில் ரத்தம் கக்கி மயங்கி விழுந்ததைப் பார்த்த பக்கத்து தோட்டத்துக்காரர், உடனடியாக ஸ்ரீரங்கசாமிக்கு அலைபேசி மூலம் தகவல் அளித்துள்ளார்.

இதனை கேட்டதும், பதறியபடி ஸ்ரீரங்கசாமி மற்றும் பழனியாத்தாள் இருவரும் தோட்டத்திற்குச் சென்றனர். அங்கு கண்ட காட்சி இருவரையும் நிலைகுலையச் செய்தது. மேய்ச்சலுக்கு விடப்பட்டிருந்த 25 ஆடுகளில், 17 ஆடுகள் தோட்டத்தின் பல பகுதிகளில் ரத்த வெள்ளத்தில் உயிரிழந்து கிடந்தன.

இது குறித்து உடனடியாக மூலனூர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், கால்நடை மருத்துவர்களை வரவழைத்தனர். இறந்த ஆடுகளை பரிசோதித்த கால்நடை மருத்துவர்கள், ஆடுகள் குடித்த தண்ணீரில் விஷம் கலக்கப்பட்டிருந்தது என உறுதிப்படுத்தினர். அதனை அருந்தியதாலேயே 17 ஆடுகளும் உயிரிழந்ததாக தெரிவித்தனர்.

இதனால் அதிர்ச்சி அடைந்த விவசாயி ஸ்ரீரங்கசாமி மற்றும் அவரது மனைவி, சுமார் 3லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆடுகளை இழந்ததாக கண்ணீர் மல்க தெரிவித்தனர். ஆடுகளை மேய்த்தே வாழ்ந்து வந்த தங்களின் வாழ்வாதாரம் ஒரே நாளில் சிதைந்துவிட்டதாக வேதனை தெரிவித்தனர்.

மேலும், தாங்கள் கொண்டு வந்த தண்ணீரையும் தவுடுகளையும் அருகிலிருந்த மாடுகளுக்கும் வைத்திருந்ததாகவும், அவை எந்த பாதிப்பும் இன்றி இருப்பதாகவும் தெரிவித்தனர்.

தாங்கள் சென்ற பிறகே, ஆடுகள் தண்ணீர் குடிக்கும் தொட்டியில் மர்ம நபர்கள் கொடிய விஷத்தை கலக்கியிருக்க வேண்டும் என சந்தேகம் தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து போலீசார், அக்கம் பக்கத்தில் யாரேனும் விரோதம் உள்ளதா, அரசியல் காரணங்கள் ஏதாவது உள்ளதா என பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தினர். ஆனால், இருவரும் யாரிடமும் பகை இல்லை, அனைவருடனும் நட்பாகவே பழகி வருவதாகவும், அரசியலுக்கும் தங்களுக்கு எந்த தொடர்பும் இல்லை என்றும் தெரிவித்தனர்.

சம்பந்தமே இல்லாமல் மர்ம நபர்கள் இவ்வாறு விஷம் கலக்கியிருப்பது மிகுந்த வேதனையை அளிப்பதாகவும், குற்றவாளிகளை கண்டறிந்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கண்ணீர் மல்க கோரிக்கை வைத்தனர்.

தாராபுரம் சுற்றுவட்டார பகுதிகளில் இதுவரை இதுபோன்ற சம்பவம் நடந்ததில்லை. ஆடுகளுக்கு விஷம் வைத்து கொல்லப்பட்ட முதல் சம்பவம் இதுதான் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆடுகளின் சாவிற்கு காரணமான மர்ம நபர்கள் யார் என்பது குறித்து, மூலனூர் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ₹5.13 கோடி மதிப்பீட்டில் போத்தாபுரம் தார் சாலை அமைக்கும் பணி — மதியழகன் எம்எல்ஏ பூமி பூஜையுடன் தொடக்கம்

கிருஷ்ணகிரி,பிப் 09-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டினம் ஒன்றியம், எர்ரஅள்ளி ஊராட்சி, போத்தாபுரம் கிராமத்தில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் ரூபாய் 5.13 கோடி மதிப்பீட்டில் புதிய தார் சாலை அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. ஹவுசிங் போர்டு முதல் ஜெகதாப் வரை போத்தாபுரம் ரோடு சாலை வழியாக அமைக்கப்பட உள்ள இந்த முக்கியமான தார் சாலை பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.



காவேரிப்பட்டினம் மத்திய ஒன்றிய செயலாளர் தேங்காய் சுப்பிரமணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்எல்ஏ அவர்கள் பூமி பூஜை செய்து பணிகளை அதிகாரப்பூர்வமாக துவக்கி வைத்தார். இச்சாலை அமைக்கப்படுவதன் மூலம் போத்தாபுரம் மற்றும் அதை சுற்றியுள்ள கிராம மக்கள், விவசாயிகள், மாணவர்கள், தொழிலாளர்கள் என அனைவருக்கும் போக்குவரத்து வசதி பெரிதும் மேம்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் கே.வி.எஸ். சீனிவாசன், மேற்கு ஒன்றிய செயலாளர் சரவணன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி.சி. முருகன் (பால்வளம்), ஒன்றிய சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அபி கவி கோவிந்தராஜ், மத்திய ஒன்றிய பொருளாளர் பிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் பேரூராட்சி துணைத் தலைவர் மாலினி மாதையன், கென்னடி, தமிழரசு, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் செந்தாமரை தமிழரசு, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பாரி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மணி விஜயன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சங்கர், ஒன்றிய அவைத் தலைவர் இளங்கோ, ஊர் கவுண்டர் குப்புசாமி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சந்திர பிள்ளை, சக்திவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டு திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து திமுக நிர்வாகிகள் பிரகாஷ், பழனி, காவேரியப்பன் உள்ளிட்ட பலர் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். புதிய தார் சாலை அமைக்கப்படுவதால், மழைக்காலங்களில் ஏற்படும் சாலை சேதங்கள் தவிர்க்கப்படுவதோடு, கிராமத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் இது துணையாக இருக்கும் என பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.



■ திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் பழனி சட்டமன்றத் தொகுதி கொடைக்கானல் கீழ் மலை ஒன்றியம் கிழக்கு செட்டிபட்டியில் தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ பி செந்தில்குமார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் TNTA மாநில தலைவர் .டில்லிபாபு ஆகியோர்கள் விழாவில் கலந்து கொண்டனர்உடன் பழங்குடியினர் ஆய்வு மேனாள் இயக்குநர் முனைவர் மகேசுவரன்,ஜிழிஜிகி மாவட்ட செயலாளர் தோழர் அஜாய் கோஷ், கொடைக்கானல் கீழ் மலை ஒன்றிய கழக செயலாளர்கள் இருமலை பாண்டி, தம்பி கி.சி.ஐயப்பன், ஒன்றிய கழக நிர்வாகிகள், தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்க நிர்வாகிகள் உடன் இருந்தனர்

# சென்னை: பப்பில் கந்த சஷ்டி பாடல் நட்சத்திர ஓட்டல் மீது புகார்

சென்னை, பிப்.9-

பப்பில் கந்த சஷ்டி பாடல் நட்சத்திர ஓட்டல் மீது புகார்




சென்னை, கிண்டியில் உள்ள பிரபல நட்சத்திர ஓட்டலில் செயல்படும் பப்பில், கடந்த சில நாட்களுக்கு முன்பு மது விருந்தின் போது பக்திப் பாடலான முருகப்பெருமானின் கந்த சஷ்டி கவசம் இசைக்கப்பட்டுள்ளது. அப்போது, அங்கிருந்த மதுப் பிரியர்கள், அந்தப் பாடலுக்கு போதையில் குத்தாட்டம் போட்டுள்ளனர்.

இதுதொடர்பாக, பாரத் இந்து முன்னணியினர், சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அளித்த் மனுவில், "முருகப் பெருமானின் கவசமாகப் போற்றப்படும் புனிதமான மந்திரத்தை, மதுபான விடுதியில் ஒலிக்கச் செய்தது கடும் கண்டனத்துக்கு உரியது. மது அருந்திய பெண்கள் மற்றும் ஆண்கள் இந்தப் பாடலுக்கு கேலியாக நடனமாடியது முருகப் பெருமானையும், இந்து மத நம்பிக்கைகளையும் இழிவுபடுத்தும் செயலாகும்.

இந்த விவகாரம் தொடர்பாக ஏற்கனவே கிண்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, சம்பந்தப்பட்ட ஓட்டல் நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது. கந்த சஷ்டி கவசம் பாடலுக்கு மதுப் பிரியர்கள் குத்தாட்டம் போடும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

# தேசிய குவான்டம் கம்ப்யூட்டர் மையத்துக்கு அடிக்கல்

## அமராவதியில் மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் பங்கேற்பு

அமராவதி, பிப.9-

நாட்டிலேயே முதன் முறையாக தேசிய குவான்டம் கம்ப்யூட்டர் மைய கட்டிடத்திற்கு நேற்று அமராவதியில் மத்திய அமைச்சர் ஜிதேந்தர சிங் அடிக்கல் நாட்டினார். இதில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு மற்றும் மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள் பலர் பங்கேற்றனர்.



ஆந்திர மாநில தலைநகர் அமராவதியில் நேற்று மாலை 'அமராவதி குவான்டம் வாலி' மைய கட்டிடத்திற்கு மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜிதேந்தர் சிங், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆகியோர் கூட்டாக அடிக்கல் நாட்டினர்.

அப்போது சந்திரபாபு நாயுடு பேசுகையில், நாட்டின் தொழில்நுட்ப எதிர்காலத்திற்கு ஒரு புதிய அத்தியாத்தை தொடங்கி வைக்கும் விதமாக தற்போது அமராவதி குவான்டம் வாலியின் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

50 ஏக்கர் நிலத்தில்...

உலக குவான்டம் தொழில்நுட்பத்திற்கு ஆந்திராவை முன்னிலை படுத்தும் நிகழ்வாக இது உள்ளது. இதன் மூலம் தேசிய குவான்டம் புரட்சிக்கு ஆந்திர மாநிலம் பிள்ளையார் சுழி போட்டுள்ளது. இதற்காக ஆந்திர அரசு அமராவதி தூளூரு பகுதியில் 50 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது. நாட்டின் முதல் 133 க்யூபிட் குவான்டம் கம்ப்யூட்டரை அமராவதிக்கு கொண்டு வர ஐபிஎம், டிசிஎஸ், எல் அண்ட் டி போன்ற நிறுவனங்கள் முக்கிய நிறுவனங்களாக உள்ளன.

குவான்டம் கம்ப்யூட்டிங், குவான்டம் தகவல் தொழில்நுட்பம், குவான்டம் சென்சார், ஏஐ தொழில்நுட்பம், சைபர் செக்யூரிட்டி, ராணுவம், மருத்துவம், கல்வி, நிதித்துறை உள்ளிட்ட முக்கிய துறைகளின் பரிசோதனைகள், தொடக்கங்கள், வளர்ச்சி பணி திட்ட பரிசோதனைகள் இனி இங்கு நடக்கும்.

குவான்டம் வாலி அமைவதன் மூலம் உலகளாவிய பரிசோதனை மையங்கள், க்ளோபல் தொழில்நுட்ப முதலீடுகள், ஸ்டார்ட் அப் எக்கோ சிஸ்டம் விரிவாக்கம், பல லட்சம் இளைஞர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சிகள், வேலை வாய்ப்புகள் கிடைக்கும். வரும் ஆகஸ்ட் மாதம் இறுதிக்குள் குவான்டம் மைய கட்டிட பணிகள் நிறைவடையும்.

டிசம்பருக்குள்ஞ் டிசம்பர் மாத இறுதிக்குள் குவான்டம் கம்ப்யூட்டரை இங்கு நிறுவ வேண்டும் என ஆந்திர அரசு லட்சியமாக கொண்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள போஸ்டன், சிங்கப்பூர், ஷாங்காய் நகரங்களுக்கு ஈடாக இனி இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் குவான்டம் வாலி இயங்கும் என்பதில் பெருமை கொள்கிறேன் என சந்திரபாபு நாயுடு பேசினார்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில்10ம் தேதி 7.17 லட்சம் நபர்களுக்கு ஆல்பெண்டாசோல் மாத்திரைகள் இலவசமாக வழங்கப்படுகிறது

கிருஷ்ணகிரி, பிப். 9-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வருகிற 10ம் தேதி 7.17 லட்சம் நபர்களுக்கு ஆல்பெண்டாசோல் மாத்திரைகள் இலவசமாக வழங்கப்படுகிறது.

மாத்திரை இலவசம்

இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில், தேசிய குடற்புழு நீக்க முகாம் வருகிற 10ம் தேதியன்றும், விடுப்பட்ட குழந்தைகளுக்கான முகாம் வருகிற 17ம் தேதியன்றும் நடைபெற உள்ளது. இம்முகாமினை சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இம்முகாமில் 1 முதல் 19 வயது வரையிலான சிறுவர்கள், கருவுறாத மற்றும் பாலூட்டாத 20 முதல் 30 வயதிற்குட்பட்ட பெண்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்படும். இதில் 1 முதல் 2 வயது குழந்தைகளுக்கு அல்பெண்டாசோல் 200 மி.கி.மாத்திரையும், 2 முதல் 10 வயது சிறுவர்கள் மற்றும் 20 முதல் 30 வயதுடைய பெண்களுக்கு 400 மி.கி. அல்பெண்டாசோல் மாத்திரையும் வழங்கப்படும். இம்மாத்திரைகள் சாப்பிடுவதால் குடற்புழு முற்றிலும் நீக்கப்படும். ரத்த சோகை நோய் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு நீங்கும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். குழந்தைகளுக்கு உடல் வளர்ச்சி அதிகரிப்பு, குழந்தையின் எடை அதிகரிப்பு, பிற நோய் தொற்றுகளுக்கு எதிர்ப்பு, மேம்படுத்தப்பட்ட அறிவாற்றல், சுறுசுறுப்பாக இருத்தல் ஆகியவை மேம்பாடு அடையும்.உலக மக்கள் தொகையில், 24 சதவீதம் பேர், மண் மூலம் பரவும் குடற்புழு தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மொத்த உலகளாவிய தொற்றுகளில் இந்தியா மட்டும் கிட்டத்தட்ட 25 சதவீதம் பங்களிக்கிறது.



தமிழ்நாட்டில் இப்பரவல் 25 சதவீதம் உள்ளது. மக்கள் தொகையில் 1 சதவீதம் பேர் திறந்த வெளியில் மலம் கழித்தல் கூட அந்த பகுதியில் உள்ளவர்களுக்கு குடற்புழு தொற்று ஏற்படலாம். தொற்றுடைய மண் மூலம், மண்ணில் விளையும் பொருட்கள் மூலம், மண்ணில் கை, கால்கள் படுவதன் மூல்ம மனிதர்களுக்கு குடற்புழு தொற்று ஏற்படுகிறது. பொதுவாக அறிகுறிகள் இருக்காது. கடுமையான தொற்று உள்ளவர்களுக்கு வயிற்றுப்போக்கு, வயிற்று வலி, பலவீனம், பசியின்மை ஏற்படும். குடற்புழுக்கள் மனிதன் சாப்பிடும் சாப்பாட்டில் உள்ள இரும்புச்சத்து, ஊட்டச்சத்து, வைட்டமின்கள் போன்றவற்றினை எடுத்துக்கொண்டு வளர்கிறது. குடற்புழு தொற்றினால் இரும்புச்சத்து இழப்பு, ரத்தசோகைக்கு ஊட்டச்சத்து குறைபாடு ஏற்பட்டு, அதனால் உடல் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது. உருளைப்புழு வைட்டமின் ஏ சத்து குறைபாட்டை ஏற்படுத்துகிறது.

7.17 லட்சம் நபர்கள்

அல்பெண்டாசோல் மருந்தினால் குழந்தைகளுக்கு, உடல் வளர்ச்சி, எடை அதிகரிப்பு, பிற நோய் தொற்றுகளுக்கு எதிர்ப்பு, மேம்படுத்தப்பட்ட அறிவாற்றல், மன மற்றும் உடல் வளர்ச்சியுடன் குழந்தைகளின் சிறந்த கற்கும் திறன், பள்ளி வருகையை அதிகரித்து பள்ளிகளில் சுறுசுறுப்பாக இருக்க முடிகிறது. வாலிப வயதினர் மற்றும் பேறுகால மகளிருக்கு, சுறுசுறுப்பாக இருத்தல், பணியில் ஆர்வம், நீண்ட நேரம் வேலை செய்யும் திறன் மேம்படுகிறது.

இதற்காக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1-19 வயது வரை உள்ள 5 லட்சத்து 52 ஆயிரத்து 417 குழந்தைகள், 20-30 வயது வரை உள்ள ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 549 பெண்கள் என மொத்தம் 7 லட்சத்து 16 ஆயிரத்து 966 நபர்களுக்கு அல்பெண்டாசோல் மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட உள்ளது. மாவட்டத்தில் உள்ள 1,796 அங்கன்வாடி மையங்கள், 270 துணை சுகாதார நிலையங்கள், 63 ஆரம்ப சுகாதார நிலையங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் அல்பெண்டாசோல் மாத்திரைகள் வழங்கும் முகாம் நடைபெறுகிறது. எனவே, குழந்தைகள், பெண்கள் மற்றும் பொதுமக்கள் இம்முகாமில் கலந்துகொண்டு பயனடைய கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161